بسم الله الرحمن الرحيم


# இஸ்லாமிய சிந்தனை

ISLAMIC THOUGHT

RESEARCH JOURNAL OF JAMIAH NALEEMIAH

மலர்: 42 இதழ்: 03 (160) செப்டம்பர் - டிசம்பர் 2024 ISSN : 1391-393X



**பிரதம ஆசிரியர்**

உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத்

**ஆசிரியர் குழு**

அஷ்ஷெய்க் கலாநிதி எம்.ஜே.எம். அரபாத் கரீம் (நளீமி) M.A. (IIUM), PhD (IIUM)

அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹஸ்ஸான் (நளீமி) MCPS (CBO)

அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். பிர்னாஸ் (நளீமி) M.A. (Sudan)

**வெளியீட்டு ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஸீ. ஐயூப் அலி (நளீமி) M.A. (Sudan)

அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் (நளீமி) M.Phil (PDN)

அஷ்ஷெய்க் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம்.எம். மஸாஹிர் (நளீமி) PhD (UM)

அஷ்ஷெய்க் கலாநிதி எச்.எல்.எம். ஹாரிஸ் (நளீமி) PhD (IIUM)

அஷ்ஷெய்க் கலாநிதி ஏ.பீ.எம். அப்பாஸ் (நளீமி) PhD (IIUM)

அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி) M.A. (Pak)



தொடர்புகளுக்கு:

The Manager,
Naleemiah Bureau of Islamic Publications,
Academy for Development, Research and Training (ADRT),
P.O. Box 01, Beruwala (12070).
Email: islamicthought@naleemiah.edu.lk


## பொருளடக்கம்


ஆசிரியர் தலையங்கம் 02
உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத்

1. அல்குர்ஆனின் பின்புலத்தில் ''ஆத்'' சமூகம் ஒரு தொல்லியல் நோக்கு 04
அஷ்ஷெய்க் நவாஸ் ஸனூர்தீன் (நளீமி)

2. நபி மொழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள திரும்பத் திரும்பச் சொல்லும் உத்தி: சொற்பொருள் பகுப்பாய்வு 13
அஷ்ஷெய்க் எம்.ஜே.எம். இம்தியாஸ் (நளீமி)
அஷ்ஷெய்க் கலாநிதி பீ.எம்.எம். இர்பான் (நளீமி)

3. பிட்காயின் (BITCOIN) இலத்திரனியல் நாணயப் பயன்பாடு: செல்வத்தைப் பாதுகாத்தல் எனும் மகாஸிதிய நோக்கிலான ஒரு பகுப்பாய்வு 22
அஷ்ஷெய்க் கலாநிதி அரபாத் கரீம் (நளீமி)

4. இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு: ஒரு சமகால நோக்கு 32
அஷ்ஷெய்க் கலாநிதி ஸகி பவ்ஸ் (நளீமி)

5. மத ஒப்பீட்டாய்வு: முஹம்மத் கலீபா ஹஸனின் சிந்தனைகள் பற்றிய ஒரு நோக்கு 43
அஷ்ஷெய்க் கலாநிதி அப்துல் மலிக் அபூபக்கர் (நளீமி)

6. மனிதனை புரிந்து கொள்வதில் இஸ்லாமிய மற்றும் மேற்கத்திய உளவியல் சிந்தனைகளுக்கிடையிலான ஓர் ஒப்பீட்டாய்வு 55
கலாநிதி எம்.எம். பைரோஸ்



இந்த ஆய்வு சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

# இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு:
## ஒரு சமகால நோக்கு

அஷ்ஷெய்க் கலாநிதி ஸகி பவ்ஸ் (நளீமி)
சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், மலேசியா
zackyfouz@iium.edu.my

***ஆய்வுச் சுருக்கம்***

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக நவீனத்துவம் முன்னிறுத்திய அறிவுக் கோட்பாடுகளுடன் உரையாடும் முகமாக பல்வேறுபட்ட புலமைத்துவ கருத்தாடல்களை இஸ்லாமிய சிந்தனையாளர்கள் முன்னெடுத்து வருகிறார்கள். சமகால இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு பற்றிய உரையாடல்கள் பெரும்பாலும் நவீனத்துவ அறிவு மரபினை புரிந்து கொள்வதெப்படி என்ற பெரும் கேள்வியைத் தழுவியதாகவே இருந்து வந்திருக்கிறது. அத்தகைய கருத்தாடல்கள் வேலைத் திட்டங்களாகவும் நிறுவனங்களாகவும் பரிணாமம் பெற்றுள்ளன. அது பற்றியதொரு மொத்தமான பார்வையையே இக்கட்டுரை முன்வைக்க முயல்கிறது. இக்கட்டுரை முன்வைக்கும் பிரதான விவாதம் யாதெனில், நவீனத்துவ அறிவுக் கட்டமைப்பை இஸ்லாமிய உலக நோக்கில் புரிந்து கொள்வதில் பல்வேறுபட்ட வித்தியாசமான நிலைப்பாடுகளை இஸ்லாமிய சிந்தனையாளர்கள் எடுத்திருக்கிறார்கள். அவை வித்தியாசமான இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு சார்ந்த நவீன சிந்தனைப் பள்ளிகளாகவும் வளர்ச்சியடைந்துள்ளன. மட்டுமன்றி, இஸ்லாமிய உலகில் நில விய சமூக- அரசியல் சூழலும் அத்தகைய உரையாடல்களை திசைப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்திருக்கிறது என்பது இக்கட்டுரை வலியுறுத்தும் மற்றொரு விவாதமாகும். இவ்விடயப் பரப்புகளை பிரதான நான்கு உப தலைப்புகளுக்கூடாக விரிவாக இக்கட்டுரை அலசுகிறது. அவையாவன, இஸ்லாத்தை நவீனமயப் படுத்தல், நவீனத்துவத்தை இஸ்லாமியப்படுத்தல், அறிவை இஸ்லாமியமயப் படுத்தல் மற்றும் நவமரபுவழிவாதம் என்பனவாகும். இறுதியாக, இந்த ஆய்வு பண்புசார் ஆய்வு வழிமுறைகளை தழுவி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *அறிவுக் கோட்பாடு, அறிவை இஸ்லாமியமயப்படுத்தல், இஸ்லாமிய சிந்தனை*

### *01. அறிமுகம்*

*அறிவுக் கோட்பாடு (Epistemology) என்பது தத்துவப் பரப்பில் முக்கியமான தொரு பகுதியாகும். குறித்த பகுதி அறிவின் இயல்பு, அறிதல் முறைகள் மற்றும் அறிவின் எல்லை போன்ற பல்வேறு கூறுகளைப் பற்றிப் பேசுகிறது (உயன்கொட, 2018). அதே போன்று, இஸ்லாமிய புலமைத்துவ வரலாற்றை திசைப்படுத்திய முக்கியமானதொரு விவா தப் பொருளாக அறிவுக் கோட்பாடு இருந்து வந்திருக்கிறது (கோஸ்டன், 2019). ஆரம்ப கால இஸ்லாமிய வரலாற்றில் தோற்றம் பெற்ற வித்தியாசமான சிந்த னைப் பள்ளிகளுக்கு மத்தியிலான கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்திய பிரதான*

விடயதானமாக இஸ்லாமிய அறிவு மூலாதாரங்களைக் குறிப்பிடலாம். உதார ணமாக, அஷ்அரி சிந்தனைப் பள்ளி வஹியை அல்லது அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவை முன்னுரிமைப்படுத்திய அதேநேரம், முஃதஸிலா சிந்தனைப் பள்ளி பகுத்தறிவை முற்படுத்தியது. இந்த பிர தான அடிப்படை கருத்து முரண்பாடுகள் பின்பு இரு வேறுபட்ட சிந்தனைப் பாரம் பரியங்களுக்கு வித்திட்டது (ஹொவ்ரானி, 2007).

இஸ்லாமிய வரலாற்றின் மத்திய காலப் பிரிவில் முக்கியமான சில தஸவ்வுப் துறை சார்ந்த சிந்தனையாளர்கள் தங்களது ஆத்மிக கண்ணோட்டங்களை அறிவுக் கோட்பாடாக முன்வைத்தார்கள். குறிப் பாக, அவர்கள் ஆத்மிக பக்குவநிலையின் அடியாகப் பெறும் அனுபவத்தை வஹி மற்றும் பகுத்தறிவுக்கு சமாந்திரமான அறிவுத் தொகுதியாக முன்னிறுத்தினார் கள். விளைவாக, வஹி, பகுத்தறிவு மற்றும் ஆத்மிகம் என்ற மூன்று தளங்களுக்கிடை யிலான உரையாடலாக இஸ்லாமிய அறி வுக் கோட்பாடு சார் விவாதம் மாற்ற மடைந்தது (அலி, 2021).

இஸ்லாமிய வரலாற்றின் பிற்பட்ட காலப் பிரிவிலும் அறிவுக் கோட்பாடு தொடர்பான விவாதங்கள் நீண்டு சென் றன. குறிப்பாக, இமாம் இப்னு தைமிய்யா வின் பிரதான ஆக்கங்களில் ஒன்றான ‘தர்உ தஆருழில் அல்-அக்ல் வந் நக்ல்’ (Refutation of the contradiction of reason and revelation) எனும் நூலின் பிரதான கருப்பொருளும் இஸ்லாமிய அறிவுக் கோட்பாட்டை வரையறை செய்வதற்கான தொரு முயற்சியாகும். அதில் இமாம் இப்னு தைமிய்யா வஹி எதிர் பகுத்தறிவு என்ற முரண்நிலைகளை மறுதலிக்கிறார். மேலும், வித்தியாசமான அறிவு மூலாதா ரங்களில் எது சிறந்தது என்பதனை விட, ஒரு கருத்தை அல்லது நிலைப்பாட்டை பலப்படுத்துவதற்கு முன்வைக்கப்படும் ஆதாரம் பலமானதா அல்லது பலவீன மானதா என்பதனையே பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்கிறார் (தபூஃகி, 2019).

இவ்வாறு, இஸ்லாமிய வரலாறு நெடு கிலும் அறிவு மூலாதாரங்களை நிரல் படுத்தல் தொடர்பான வித்திசாயமான உரையாடல்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்துள்ளன. ஆனால், ஒரு பொது வான அவதானம் யாதெனில், எந்தவோர் அறிவு மூலதாரத்தையும் மறுதலிக்கும் போக்கு காணப்படவில்லை. மாறாக, சகல கருத்து முரண்பாடுகளும் மூலாதாரங் களை நிரல்படுத்தல் பற்றியதாகும். குறிப் பாக, இஸ்லாமிய வரலாற்றில் தோற்றம் பெற்ற தத்துவ மரபை பிரதிநிதித்துவப் படுத்திய அபூ நஸ்ர் அல்-ஃபாராபி போன்றவர்கள் கூட பகுத்தறிவை வஹியை விட மேலானதாக கருதினார்கள். ஆனால், வஹியின் பயன்பாட்டையும் அறிவுரு வாக்கத்தில் அதன் பாத்திரத்தையும் புறக் கணிக்கவில்லை.

ஆனால், காலனியம் மற்றும் நவீனத் துவத்தின் வருகையுடன் மேற்சொன்ன தோற்றப்பாட்டில் மாற்றம் ஏற்படத் துவங் கியது. ஏனெனில், நவீனத்துவ சிந்தனைக் கட்டமைப்பு முன்வைத்த விஞ்ஞானப் பகுப்பாய்வு கண்ணோட்டத்திற்கு முரண் படும் எத்தகையதொரு அறிவு மூலதாரத் தையும் அது ஏற்றுக் கொள்வதற்கு தயா ராக இருக்கவில்லை. அதாவது, ஒன்றில் பகுத்தறிவின் நிழலில் ஏனைய மூலாதா ரங்களை மறுவாசிப்புச் செய்ய வேண்டும் அல்லது அவை உருவாக்கும் கண்ணோட் டங்களை ‘அறிவாக’ கருதாமல், அவற்றை நிறுவ முடியாத ஊகங்களாக நோக்க வேண்டும் என்ற கருத்தை நவீனத்துவ சிந்தனைச் சட்டகம் வலியுறுத்தியது

*(மஸ்ஊத், 2007).* விளைவாக, முஸ்லிம் உலகில் அதிகம் செல்வாக்குச் செலுத்திய அஷ்அரி சிந்தனைப் பள்ளியின் அறிவுச் சட்டகத்தையும் குறித்த சிந்தனைப் பள்ளியைப் பிரதிநிதித்துவப்படுத்திய இஸ்லாமிய மேதைகளான அல்-கஸ்ஸாலி போன்றவர்களது பகுத்தறிவு தொடர்பான நிலைப்பாடுகளை முஸ்லிம் உலகின் வீழ்ச்சிக்கான காரணமாக சில கீழைத்தேய ஆய்வாளர்கள் சுட்டிக்காட்ட முற்பட்டார்கள் *(தப்ரீஸி, 1996).* தொடர்ந்து இஸ்லாமிய உலகின் அறிவுருவாக்க மூலங்களை, கட்டமைப்புகளை மற்றும் சமூக ஒழுங்களை நவீனத்துவ பெறுமானங்களில் மீள்வடி வமைக்கும் வேலைத் திட்டத்தையும் காலனியம் முடுக்கி விட்டது. இந்த முழு செயற்பாட்டையும் Epistemicide என அழைக்கிறார் வாயில் ஹல்லாக் *(ஹல்லாக், 2019).* அதாவது, ஒரு சமூகத்தினுடைய அறிவுத் தொகுதியை படுகொலை செய்தல் என்பதாகும்.

என்றாலும்கூட, கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக நவீனத்துவம் முன்னிறுத்திய அறிவுக் கோட்பாடுசார் சவாலை எதிர்கொள்ளும் முகமாக பல்வேறுபட்ட புலமைத்துவ கருத்தாடல்களை இஸ்லாமிய சிந்தனையாளர்கள் முன்னெடுத்து வருகிறார்கள். சமகால இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு பற்றிய உரையாடல்கள் பெரும்பாலும் நவீனத்துவ அறிவு மரபினை புரிந்து கொள்வதெப்படி என்ற பெரும் கேள்வியைத் தழுவியதாகவே இருந்து வந்திருக்கிறது. அத்தகைய கருத்தாடல்கள் வேலைத் திட்டங்களாகவும் நிறுவனங்களாகவும் பரிணாமம் பெற்றுள்ளன. அது பற்றியதொரு மொத்தமான பார்வையையே இக்கட்டுரை தர முயல்கிறது. இக்கட்டுரை முன்வைக்கும் பிரதான விவாதம் யாதெனில், நவீனத்துவ அறிவுக் கட்டமைப்பை இஸ்லாமிய உலக நோக்கில் புரிந்து கொள்வதில் பல்வேறுபட்ட வித்தியாசமான நிலைப்பாடுகளை இஸ்லாமிய சிந்தனையாளர்கள் எடுத்திருக்கிறார்கள். அவை வித்தியாசமான இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு சார்ந்த நவீன சிந்தனைப் பள்ளிகளாகவும் வளர்ச்சியடைந்துள்ளன. மட்டுமன்றி, இஸ்லாமிய உலகில் நிலவிய சமூக- அரசியல் சூழலும் அத்தயை உரையாடல்களை திசைப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்திருக்கிறது என்பது இக்கட்டுரை வலியுறுத்தும் மற்றொரு விவாதமாகும். இவ்விடயப் பரப்புகளை பிரதான நான்கு உபதலைப்புகளுக்கூடாக விரிவாக இக்கட்டுரை அலசுகிறது. அவையாவன, இஸ்லாத்தை நவீனமயப்படுத்தல், நவீனத்துவத்தை இஸ்லாமியப்படுத்தல், அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் மற்றும் நவமரபுவழிவாதம் என்பனவாகும்.

## *02. இஸ்லாத்தை நவீனமயப்படுத்தல்: ஜமாலுத்தீன் ஆப்கானி மற்றும் முஹம்மத் அப்துஹு*

இஸ்லாமிய நவீனத்துவ சிந்தனை முகாமின் மூன்று முக்கிய முன்னோடிகளாக ஜமாலுத்தீன் ஆப்கானி, முஹம்மத் அப்துஹு மற்றும் செய்யத் அஹ்மத் கான் போன்றவர்களைக் குறிப்பிடலாம். நவீனத்துவ அறிவுக் கோட்பாடு தொடர்பாக உடன்பாடான நிலைப்பாட்டையே பொதுவாக இம்மூன்று சிந்தனையாளர்களும் கொண்டிருந்தார்கள். அவர்கள் நவீனத்துவ அறிவுக் கோட்பாடு மற்றும் அதன் விஞ்ஞானப் பகுப்பாய்வு கண்ணோட்டங்கள் குறித்து இரண்டு முக்கியமான கருத்துக்களை முன்வைத்தார்கள்.

***முதலாவது,*** பகுத்தறிவு மற்றும் விஞ்ஞான ஆய்வுகளை வலியுறுத்தும் நவீனத்துவ அறிவுக் கோட்பாடானது சர்வதேசத் தன்மை கொண்டது என்பதாகும். அதாவது, அத்தகைய அறிதல் முறைகள்;

நவீனத்துவத்தின் அடியாக ஐரோப்பிய சூழலில் தோற்றம் பெற்ற போதிலும்கூட, அவை எந்தவொரு தத்துவ அல்லது கலாச்சார பின்புலங்களையும் சுமந்தவையல்ல. உலகில் எந்தப் பாகத்தில் வாழும் ஒரு சமூகமாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு நவீனத்துவம் அறிமுகம் செய்த புதிய பகுத்தறிவு மற்றும் நவீன விஞ்ஞான அறிதல் முறைகளை அகவயப்படுத்திக் கொள்ள முடியும் என்பதாகும்.

குறிப்பாக, ஜமாலுத்தீன் ஆப்கானி 'இஸ்லாம் என்பது பகுத்தறிவின் மார்க்கமாகும். நவீனத்துவத்தின் அதே உள்ளீடுகளை இஸ்லாமும் சுமந்திருக்கிறது' என்கிறார். மேலும், அவர் 'விஞ்ஞானம் என்பது புனிதமானதொரு செயற்பாடாகும். அதற்கு எந்த மதத்துடனோ அல்லது சமூகத்துடனோ குறிப்பான உறவுகள் எதுவும் இல்லை' என்கிறார். இன்னோர் இடத்தில், ஆப்கானி 'விஞ்ஞான முறைகள் எமது கவனத்தை ஈர்க்க வேண்டுமே தவிர, அதனை அறிமுகம் செய்த மனிதர்கள் அல்ல' என்றும் சொல்கிறார். ஆர்னஸட் ரேனனுக்கு எழுதிய கடிதமொன்றில் ஆப்கானி 'மதங்கள் மற்றும் பல்வேறுபட்ட கலாச்சாரங்களுடைய ஆதிக்கத்திலிருந்து விஞ்ஞானத்தை பாதுகாக்க வேண்டும்' என்று வலியுறுத்துகிறார் (தப்ரீஸி, 1996).

அதே போன்று, நவீனத்துவம், விஞ்ஞானம் மற்றும் பகுத்தறிவு வாதம் பற்றிய ஆப்கானியின் கண்ணோட்டங்களால் அதிகம் கவரப்பட்டவர் முஹம்மத் அப்துஹு. முஹம்மத் அப்துஹுவும் மதமும் நவீன விஞ்ஞானமும் பகுத்தறிவும் பரஸபரம் முரண்படும் அறிதல் முறைகள் அல்ல என்ற கருத்தை வலியுறுத்தினார். அவர் தன்னுடைய ரிஸாலதுத் தவ்ஹீத் என்ற நூலில் 'இஸ்லாம் மனிதர்களது அறிவுக்கு அப்பாற்பட்ட கருத்துக்களை மற்றும் நிகழ்வுகளைப் பற்றிப் பேசலாம். ஆனால், பகுத்தறிவை மறுதலிக்கும் வழிகாட்டல்களை தர மாட்டாது' என எழுதிச் செல்கிறார் (நபீல், சூரியே, இஸ்மாஈல், 2012). மேலும், முஹம்மத் அப்துஹுவின் அறிவுச் செயற்பாட்டின் மையம் வஹி, பகுத்தறிவு மற்றும் தனி மனித சுதந்திரம் என்ற மூன்று புள்ளிகளுக்கு மத்தியில் உடன்பாட்டை கண்ட டைந்து கொள்வதுதான் என்கிறார் பேராசிரியர் மெல்கம் கீர் (கீர், 1966). மேலும், பகுத்தறிவு மற்றும் விஞ்ஞானப் பகுப்பாய்வு முறை பற்றிய முஹம்மத் அப்துஹுவின் கண்ணோட்டங்களை விரிவாக ஆய்வு செய்யும் பேராசிரியர் லிவிங்ஸ்டன் 'இஸ்லாத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் மத்தியில் எந்த முரண்பாடும் இல்லை. ஏனெனில், இரண்டையுமே பகுத்தறிவின் உதவியைக் கொண்டுதான் புரிந்து கொள்ள வேண்டும் என முஹம்மத் அப்துஹு நம்பினார்' என எழுதிச் செல்கிறார் (லிவிங்ஸ்டன், 1995).

அதனோடிணைந்த வகையில், மதங்கள் காலம் கடந்த கற்பனைகள்; விஞ்ஞானமே மனித சமூகத்தின் எதிர்காலம் என்ற கருத்து தீவிரமாக சமூகங்களை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தபோது விஞ்ஞானம், பகுத்தறிவு மற்றும் மதம் என்ற மூன்று பரிமாணங்களை இணைக்கும் முற்போக்கான புத்திஜீவித்துவ வேலைத் திட்டமாக முஹம்மத் அப்துஹுவின் கருத்துகள் தொழிற்பட்டன என எழுதிச் செல்கிறார் பேராசிரியர் ஹமில்டன் கிப் (கிப், 1952).

**இரண்டாவது,** இஸ்லாமிய நாகரிகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஒரே வழி பகுத்தறிவு மற்றும் விஞ்ஞான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட அறிவுக் கோட்பாட்டை முஸ்லிம்கள் உள்வாங்கிக் கொள்வதாகும் என்ற கருத்தையும் ஆப்கானி, அப்துஹு

மற்றும் செய்யத் அஹ்மத் கான் போன்றவர்கள் கொண்டிருந்தார்கள். அதாவது, இஸ்லாமிய நாகரிகத்தின் மீளெழுச்சியின் ஆணி வேர் நவீன விஞ்ஞானத்தில் இருக்கிறது என அவர்கள் நம்பினார்கள். மறுபுறம், இஸ்லாமிய உலகின் வீழ்ச்சிக்கான காரணமும் நவீன பகுத்தறிவு மற்றும் விஞ்ஞான அணுகுமுறைகளை முஸ்லிம்கள் கைவிட்டமைதான் என்றும் கருதினார்கள். இன்னொரு வசனத்தில் சொல்வதானால், இஸ்லாத்தை நவீனத் துவமயப்படுத்துவதே (Modernization of Islam) முஸ்லிம்களின் எதிர்கால எழுச்சிக்கான பாதையாகும். அதாவது, நவீனத்துவ அறிதல் முறைகளை பிரதான அளவீடுகளாகக் கொண்டு இஸ்லாமிய உலக நோக்கை மீளர்நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள் (தப்ரீஸி, 1996). ஆனால், நவீனத்துவம் தனது அறிதல் முறைகளை பாரம்பரியத்திலிருந்து விடுபட்டு எதிர்காலத்தை நோக்கி முன்னோக்கிச் செல்வதற்கான பாதையாக கருதியபோது, ஆப்கானியும் அப்துஹுʻவும் அவ்வறிதல் முறைகளை இஸ்லாத்தின் ஆரம்ப கால நாகரிக எழுச்சியின் அடிப்படைகளாக கண்டார்கள். அதாவது, இஸ்லாத்திற்கும் நவீனத்துவ அறிதல் முறைகளுக்கும் இடையில் உடன்பாடு காண்பதென்பது எமது பாரம்பரியத்தின் உண்மையான அடிப்படையை நோக்கி பயணிப்பதாகும் எனவும் கருதினார்கள்.

இத்தகைய இஸ்லாமிய நவீனத்துவ சிந்தனையை சமகாலத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சிந்தனைச் சட்டகத்தையே தாரிக் ரமழான் முன்வைத்திருப்பதாக கருத முடியும். அவரும் வஹியையும் பகுத்தறிவையும் இரு பிரத்தியேகமான அறிதல் முறையாக ஏற்றுக் கொள்கிறார். இரண்டும் அதற்கேயுரிய அடிப்படைகளுடன் இயங்கும் இரு வேறுபட்ட இறை அத்தாட்சிகள் என்றும் வலியுறுத்துகிறார். ஆனால், வஹியோ அல்லது பகுத்தறிவோ ஏனைய அறிதல் முறைகளைக் கட்டுப்படுத்த முடியாது. எல்லா அறிதல் முறைகளுக்கும் அதற்கேயுரிய அடிப்படைகளும் இலக்குகளும் இருக்கின்றன. மாறாக, வித்தியாசமான அறிதல் முறைகளை அறிவுருவாக்கச் செயற்பாட்டில் இணைத்துப் பிரயோகிக்க வேண்டும் என்கிறார். மேலும், நவீனத்துவ அறிதல் முறைகளும் ஐரோப்பாவிற்குரியவை அல்ல என்றும் பல நூற்றாண்டு கால நாகரிக வளர்ச்சியின் விளைவுகளே அவை என்றும் கூறுகிறார் (ரமழான், 2009).

### 03. நவீனத்துவத்தை இஸ்லாமியமயப் படுத்தல்: மௌலானா மௌதூதி (ரஹ்)

கிலாபத் வீழ்ச்சி மற்றும் கடும்போக்கு மதச்சார்பற்றவாத தேசிய அரசுகளின் எழுச்சி என்பன நவீனத்துவம் மற்றும் அது வலியுறுத்திப் பேசிய அறிதல் முறைகள் பற்றிய எதிர்மறை கண்ணோட்டங்களை முஸ்லிம் உலகில் தோற்றுவித்தன. குறிப்பாக, மேற்குலக அறிதல் முறைகள் மற்றும் கல்விக் கோட்பாடுகள் தத்துவ ரீதியாக மதச்சார்பற்ற வாதத்தை போதிப்பவை. எனவே, இஸ்லாமிய உலக நோக்கில் அமைந்த புதிய அறிவு மற்றும் கல்விக் கோட்பாடுகள் அறிமுகம் செய்யப்பட வேண்டும் என்று பேசப்பட்டன. இன்னொரு வசனத்தில் சொல்வதானால், இஸ்லாத்தை நவீனத்துவப்படுத்துவதனை விடுத்து, நவீனத்துவத்தை இஸ்லாமியப்படுத்த வேண்டும் என்ற கருத்தாடல் உருவாகிறது. இத்தகையதொரு சிந்தனைப் போக்கை பிரதிநிதித்துவப் படுத்திய முக்கிய சிந்தனையாளராக மௌலானா மௌதூதியை குறிப்பிட முடியும். குறிப்பாக, நவீனத்துவ அறிதல் முறைகளை நடுநிலையானவை என்ற

ஆப்கானி, அப்துஹு மற்றும் செய்யத் அஹ்மத் கானின் கண்ணோட் டங்களை மௌதூதி ஏற்க மறுக்கிறார். மேலும் அவர்கள் முன்வைத்த இஸ்லாமியக் கலை களையும் நவீன விஞ்ஞானங்களையும் ஒரு கூரையின் கீழ் இணைத்துக் கற்பிக்கும் வேலைத்திட்டத்தையும் கடுமையாக விமர்சனம் செய்கிறார். எல்லா அறிதல் முறைகளும் குறிப்பிட்டதோர் உலக நோக் கினை அடிப்படையாக வைத்தே தொழிற் படுகின்றன. அந்த விதத்தில், இஸ்லாமிய அறிவுக் கோட்பாடும் நவீனத்துவ அறிவுக் கோட்பாடும் இரு வேறுபட்ட கல்விக் கொள்கைகளை போதிப்பதவை. இரண் டுமே இணைய முடியாத இரு தத்துவப் பரப்புகள் என்கிறார் மௌலானா மௌதூதி (மௌதூதி, 2009).

இந்தப் பின்புலத்தில், செய்யத் அஹ்மத் கானின் அலிகார் பல்கலைக்கழகத் திட்டத்தை மௌதூதி கடுமையாக விமர்ச னம் செய்கிறார். மாறாக, முழு கல்விக் கொள்கையுமே இஸ்லாமிய உலக நோக்கின் கீழ் மீளவும் புதிதாக வரையப் பட வேண்டும் என்கிறார். எல்லா பாட சாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் பாடங்களை இஸ்லாமிய மூலாதாரங்களில் நின்று புரிந்து கொள்ளும் வகையில் புதிய இஸ்லாமிய கல்விக் கொள்கை அமைய வேண்டும் என்கிறார் (மௌதூதி, 2009). இஸ்லாமியக் கலாச் சாரங்கள் மற்றும் பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் வகையில் கல்விச் சூழலும் மற்றும் சமூக- இயற்கை விஞ் ஞான பாடப் பரப்புகள் மீளவும் தொகுக்கப்பட வேண்டும் என்கிறார் (மௌதூதி, 2009). என்றாலும், மௌதூதி முன்வைக்கும் மற்றொரு கருத்து அவரது அறிவுக் கோட்பாடு மற்றும் கல்விக் கொள்கையை முழுமையாக புரிந்து கொள் வதற்கு முக்கியமானது. அதாவது, முழு மையானதொரு சமூக- அரசியல் மாற்ற செயற்திட்டமே இஸ்லாமிய அறிவுக் கோட்பாட்டையும் அதனடியாக எழும் இஸ்லாமிய கல்விக் கொள்கையையும் முழுமையாக செயற்படுத்த முடியுமான தொரு நிலையை தோற்றுவிக்க முடியும்.

எனவே, முஸ்லிம்கள் சமூக- அரசியல் மாற்றத்தை முற்படுத்த வேண்டும். அதற் கூடாக, இஸ்லாத்தின் ஏனைய பகுதிகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என வலியுறுத்தினார். குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தினுடைய அரசியல் மாற்றம் ஏனைய மாற்றங்களுக்கு அடிப்படை யானவை என்ற கருத்தை அழுத்தமாக முன்வைத்தார் மௌதூதி. இத்தகைய அகன்ற சமூக- அரசியல் மாற்றம் பற்றிய பார்வைக் கோணத்திலிருந்து மௌலானா மௌதூதியின் அறிவுக் கோட்பாடு பற்றிய கண்ணோட்டங்களை நோக்க வேண்டும். இதே நிலைப்பாட்டையே செய்யத் குத்பும் கொண்டிருந்ததாக ஆய்வாளர் தப்ரீஸி குறிப்பிடுகிறார். குறிப்பாக, இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு மற்றும் கல்வி தத்துவத்தை இஸ்லாமிய சமூகம் தான் பிரசவிக்க முடியும். இஸ்லாமிய சமூக அமைப்பில்லாத சூழல் அதனை பிரசவிக்க முடியாது என்று குத்ப் கருதியதாகவும் அவர் எழுதிச் செல்கிறார் (தப்ரீஸி, 1996).

## 04. அறிவை இஸ்லாமியமயப்படுத்தல்

1960-70களில் முஸ்லிம் உலகின் அரசி யல் மாற்றங்களின் விளைவாகவே கல்வி, பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப் பில் மாற்றங்கள் ஏற்பட முடியும் என்ற கருத்து விமர்சனத்திற்குட்படத் துவங்கி யது. மாறாக, மேலும், இஸ்லாமிய உலகில் கல்விக் கட்டமைப்பில் ஏற்படுத் தப்படும் மாற்றங்களின் ஒரு விளை வாகவே சமூக அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றும் சொல்லப் பட்டது. இத்தகைய புதிய உரையாடல்

களின் ஒரு விளைவாகவே அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் என்ற கருத்தாடல் தோற்றம் பெற்றது (தப்ரீஸி, 1996).

எனவே, ஆரம்பமாக சமகால இயற்கை விஞ்ஞானங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்களது தத்துவ அடிப்படைகளை விமர்சன ரீதியாக அணுகி, அதில் காணப்படும் இஸ்லாமிய உலக நோக்குடன் முரண்படும் கருத்துக்களை, நோக்கங்களை, அணுகுமுறைகளை அகற்ற வேண்டும். பின்பு, அத்தகைய அறிவுத் துறைகளை இஸ்லாமிய உலக நோக்கின் அடிப்படையில் மீளவும் புதிதாக கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனையை அவர்கள் முன்வைத்தார்கள். இதுவே, அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் என்ற எண்ணக் கரு முன்வைத்த பிரதான சிந்தனையாகும் (கிய்ம், 2017).

இவ் எண்ணக்கருவின் பொதுவான அர்த்தத்தை அது சார்ந்து இயங்கிய சிந்தனையாளர்கள் ஏற்றுக் கொண்டாலும்கூட, அவர்களுக்கு மத்தியில் நுணுக்கமான வித்தியாசங்களும் காணப்பட்டன. குறிப்பாக, அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் சிந்தனையின் முன்னோடிகளாக நகீப் அத்தாஸ், இஸ்மாஈல் பாரூக்கி, அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான் மற்றும் தாஹா ஜாபிர் அலவானி போன்றவர்கள் கருதப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் சார்ந்து பிரத்தியேகமான கண்ணோட்டங்களைக் கொண்டிருந்தார்கள். உதாரணமாக, முஸ்லிம் உலகில் மதச்சார்பற்றவாதம் வலுப்பெறுவதற்கான அடிப்படையான காரணங்களில் அதன் கல்விக் கட்டமைப்பைக் கருதுகிறார் நகீப் அத்தாஸ். எனவே, இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் நின்று மதச்சார்பற்றவாதத்தை விமர்சனபூர்வமாக அணுகுவதே அவரது எழுத்துக்களது சாராம்சமாகும் என அவர் குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட கைருத்தீன் ஜுனைத் எழுதிச் செல்கிறார் (ஜுனைத், 2022). அதாவது, அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் என்பது இஸ்லாமிய உலகில் செல்வாக்குச் செலுத்தி வரும் மதச்சார்பற்ற போக்கினை கேள்விக்குள்ளாக்கும் வேலைத்திட்டம் என்பதே நகீப் அத்தாஸின் புரிதலாகும்.

நகீப் அத்தாஸ் பாரம்பரிய ஸூபி சிந்தனைப் பின்புலத்தைக் கொண்டவர். எனவே, தஸவ்வுப் சிந்தனையை அடிப்படையாக வைத்தே அவர் தனது அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் கோட்பாட்டை முன்வைக்கிறார். அதாவது, அவரது பார்வையில் சமகால சமூக- இயற்கை விஞ்ஞான பாடப் பரப்புகள் சடவாத உலக நோக்கை, அதனை பலப்படுத்தும் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை. இதனால், ஆத்மிக உலகை புறக்கணிக்கும் ஒரு சமூக சூழல் உருவாகி இருக்கிறது. சமகாலக் கல்வியை ஆத்மிக பின்புலத்துடன் இணைத்துவிடும் பொறிமுறையே அறிவை இஸ்லாமியமயப்படுத்தலாகும் என்கிறார் அல்-அத்தாஸ். இன்னொரு வசனத்தில் சொன்னால், அறிவை மற்றும் அறிவுத் தேடலை இறைவனை அடைந்து கொள்வதற்கான ஆத்மிகப் பயணமாக முன்வைக்கும் கல்விச் சிந்தனையே அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் என்பதே அல்-அத்தாஸின் புரிதலாகும். இந்த கண்ணோட்டத்தை சமூக- இயற்கை விஞ்ஞான ஆய்வுச் செயற்பாட்டில் உள்ளீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் மேலும் அவர் எழுதிச் செல்கிறார் (இக்பால், 2016). எல்லா சமூக- இயற்கை விஞ்ஞான ஆய்வுகளின் இறுதி அடைவு இறைவனை அடைந்து கொள்வதும் ஹிக்மா அல்லது மஃரிபா எனும் இறைஞானத்தை பெற்றுக் கொள்வதுமாகும் என்றும் அவர் கோடிட்டுக் காட்டுகிறார் (மோடன், 2023).

சுருக்கமாகச் சொன்னால், அல்-அத்தாஸின் பார்வையில் அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் என்பது எமது ஆய்வு முயற்சிகளில் இஸ்லாமிய ஆத்மிகக் கண்ணோட்டத்தை இணைத்துக் கொள்வதனை மையப்படுத்தியே சூழல்வதனைக் காணலாம். எனவேதான், இஸ்லாமிய அறிவு மூலதாரங்களை நிரல்படுத்தும் போது, வஹி மற்றும் பகுத்தறிவை சரியாக புரிந்து கொள்வதற்கும் அதனை நெறிப்படுத்துவதற்கும் ஆத்மிகம் அடிப்படையானது என அவர் கருதுகிறார்.

மறுபுறம், இஸ்மாஈல் அல்-பாரூக்கியின் சிந்தனைச் சட்டகம் சமகால அறிவை இஸ்லாத்தினுடைய தவ்ஹீத் கோட்பாட்டின் அடியாக மீள்வாசிப்புச் செய்வதனை மையப்படுத்தியது. அதாவது, முழு அறிவுத் துறைகளையும் இறைவனின் ஏகத்துவத்தின் பரிமாணங்களாகப் புரிந்து கொள்வதே அறிவை இஸ்லாமியமயப்படுத்தலாகும் என்கிறார் அவர் (டெஸ்லோ, 2012). இன்னும், அறிவை இஸ்லாமியமயப் படுத்தல் என்பது பல்வேறு துறைகளாகவும் கூறுகளாவும் பிரிந்து சென்று கொண்டிருக்கும் அறிவுப் பரப்புகளை அதன் நோக் கத்துடனும் இலக்குகளுடனும் ஒருங்கிணைக்கும் பணி என்பதே பாரூக்கியின் கருத்தாகும். அதேநேரம், சமகால அறிவுப் பரப்பை பகுத்தறிவின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, வஹியின் நிழலில் அதனை ஒழுங்குபடுத்துவதும் அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் செயற்திட்டத்தின் இலக்காகும் என்கிறார் (மோடன், 2023). பாரூக்கியின் பார்வையில் வெறுமனே சமகால அறிவு பற்றிய எமது பார்வைக் கோணத்தை மாற்றி விடுவது மட்டுமல்ல அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் என்பது. மாறாக, சமகால நவீனத்துவ அறிவுச் சட்டகத்தை மதிப்பீடு செய்தல், அதனை இஸ்லாமிய உலக நோக்கின் கீழ் மீள ஒழுங்குபடுத்தல், இஸ்லாமிய ஆய்வுக் கண்ணோட்டத்தைப் பிரயோகித்து பெற்றுக் கொண்ட புதிய உள்ளீடுகளை உள்வாங்கிக் கொள்ளல் மற்றும் புதிய இஸ்லாமிய சமூக விஞ்ஞானங்களை அறிமுகம் செய்தல் என்ற பல கட்டங்களைக் கொண்டதாகும் (பாரூகி, 1988).

இஸ்மாஈல் பாரூக்கியின் மரணத்தைத் தொடர்ந்து அறிவை இஸ்லாமியமயப் படுத்தல் கருத்தாடல் வேறுபட்ட இரு கோணங்களில் பயணித்ததனை அவதானிக்க முடியும். குறிப்பாக, அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் சிந்தனைத் திட்டத்தில் பிரதான எண்ணக்கருவாக இஸ்லாமிய ஆய்வு முறையொன்றை (Islamic Methodology) அறிமுகம் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான். குறிப்பாக, இஸ்லாமியக் கலைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களை இணைக்க முடியுமான ஆய்வு முறையாக அது அமைய வேண்டும் என்பதும் பேராசிரியர் அபூ ஸுலைமானுடைய கருத்தாக இருந்தது. குறிப்பாக, அத்தகையதொரு ஆய்வு முறை இல்லாமையே சமகால முஸ்லிம்கள் எதிர் கொள்ளும் சிந்தனைச் சிக்கலுக்கான (The Crisis of Muslim Mind) பிரதான காரணம் என்றும் அவர் வாதித்தார். மேலும், பிரதான இஸ்லாமிய மூலாதாரங்களை அதற்குரிய கால- சூழல் மற்றும் இட பரிமாணங்களுடன் புரிந்து கொள்வதும் சமகால நவீன சமூகச் சூழல்களை மற்றும் அதன் தர்க்கங்களின் நிழலில் இஸ்லாமிய மூலாதாரங்களை பிரயோகிப்பதும் இஸ்லாமிய ஆய்வு முறையியல் அடிப்படையான அம்சங்களாகவும் அபூ ஸுலைமான் அடையாளம் காண்கிறார் (மோடன், 2023).

நகீப் அல்அத்தாஸ், இஸ்மாஈல் பாரூக்கி மற்றும் அபூஸுலைமான் ஆகியோரைப்

போன்று அறிவை இஸ்லாமியமயப் படுத்தல் சார்ந்து காத்திரமான கருத்தாடல் களை உருவாக்கியவராக கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அலவானியை குறிப்பிட முடி யும். ஏனைய மூன்று சிந்தனையாளர் களை விடவும் சற்று வித்தியாசமான கோணத்தில் தாஹா ஜாபிர் அலவானி அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் கோட்பாட்டைப் புரிந்துகொள்வதற்கு முயன்றார். குறிப்பாக, வஹி மற்றும் பகுத்தறிவு என்ற இரு அறிவு மூலங் களையும் ஒருங்கிணைக்கும் மொத்தமான பார்வை அவசியம் என வாதித்தார். அதாவது, வஹி மற்றும் பகுத்தறிவு என்பன இரு முரண்பட்ட அறிவு மூலங் கள் அல்ல. மாறாக, ஒன்றைப் புரிந்து கொள்வதற்கு மற்றையது அவசியம். இரண்டுமே இறைவனின் அத்தாட்சிகள் என்பது அலவானியின் புரிதலாகும். அதே போன்று, அல்குர்ஆன், ஸுன்னாவைப் புரிந்து கொள்வதற்கான நவீன முறைமை களைக் கட்டியெழுப்புவதும் அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் செயற்திட்டத் தில் முக்கியமான பகுதியாகும் என்றும் வலியுறுத்தினார். எனவே, அறிவை இஸ் லாமியமயப்படுத்தல் சிந்தனைச் சட்டகத் தில் ஷரீஆத் துறை அறிஞர்களது வகி பாகம் இன்றியமையாதது என்ற கருத்தை யும் அவர் கொண்டிருந்தார் (மோடன், 2023).

### 05. நவ மரபுவழிவாதம் (Neo-Traditiona lism): பேராசிரியர் ஹுஸைன் நஸ்ர்

இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு தொடர்பான சமகால கருத்தாடல்களை ஆய்வு செய்யும் பல ஆய்வாளர்கள் முன் வைக்கும் மிக முக்கியமான அவதானம் யாதெனில், நவீனத்துவ அறிவுக் கோட் பாடு தொடர்பான மிக குறிப்பான விமர்ச னங்களை முன்வைத்த முதலாவது இஸ் லாமிய சிந்தனையாளராக பேராசிரியர் செய்யத் ஹுசைன் நஸ்ர் உள்ளார். (தப்ரீஸி, 1996). குறிப்பாக, நவீனத்துவ அறிவுக் கோட்பாடு தொடர்பாக அவர் முன்வைக்கும் பிரதான விமர்சனம் உலகம் மற்றும் மனிதன் தொடர்பான சடரீதியான பார்வை யொன்றை கட்டியெழுப்புவதற்கு அது உதவி செய்துள்ளது என்பதாகும். மாறாக, அறிவுருவாக்க செயற்பாட்டில் ஆத்மிக பரிமாணங்களை நவீனத்துவ ஆய்வு முறைகள் மறுக்கின்றன.

மேலும் அறிவின் எல்லையை இவ் வுலகின் சடரீதியான இயக்கத்தை புரிந்து கொள்வதுடன் மட்டுமே அது சுருக்கிக் கொள்கிறது. விளைவாக, அறிவு உரு வாக்க செயற்பாட்டின் புனிதத் தன்மையை சிதைப்பதற்கு (Sacredness) நவீனத் துவ ஆய்வுக் கோட்பாடுகள் துணை செய்கின் றன என்கிறார் அவர். மாறாக, நஸ்ர் நவீனத்துவ அறிதல் முறைகளை மறுக்க வில்லை. மாறாக, அதனை சர்வசத்தன்மை கொண்ட உயர்ந்த தர அறிவாக கருதப் படுவதனை விமர்சனம் செய்கிறார் (மோடன், 2023). மாறாக, பாரம்பரிய அறிவுக் கோட்பாடுகளை மீளவும் உயிர்ப் பிக்க வேண்டும் என்பது அவரது பார்வை யாகும். அதாவது, பாரம்பரிய அறிவுக் கோட்பாடுகள் அறிவை பல தராதரங் களாக பிரித்து நோக்குகின்றன. அது அறிவை அதன் முக்கியத்துவத்தின் அடிப் படையில் தரப்படுத்துகின்றன. அதனை 'Hierarchy of Knowledge' என அழைப்ப துண்டு. அதில், உலகம் மற்றும் மனித சமூகத்தினுடைய சடரீதியான இயக்கத்தை புரிந்து கொள்ளும் ஆய்வு முயற்சிகளை இரண்டாம் இடத்திலும் அவற்றின் ஆத் மிகப் பரிமாணங்கள் பற்றிய அறிவை உயர்தர அறிவாக பாரம்பரிய அறிவுக் கோட்பாடுகள் கருதுகின்றன. இதனை இன்னொரு வசனத்தில் சொன்னால், பாரம்பரிய அறிவுக் கோட்பாடுகள் அறிதல்

முறைகளை தராதரப்படுத்தி (Epistemo logical Hierarchy) நோக்குகிறது. அவை ஆத்மிக அறிவை, ஹிக்மாவை சடரீதியான ஆய்வுக்கூடாக பெற்றுக் கொள்ளும் அறிவை விட தரமானவையாகக் கருது கின்றன.

மேலும் மேற்கூறப்பட்ட அறிதல் முறை களை நிரல்படுத்தும் கண்ணோட்டத்திற்கு வித்திட்ட பின்புலக் காரணி யாதெனில், முழு பிரபஞ்சத்தையும் இறைவனின் ஏகத் துவத்துடன் பிணைக்கப்பட்ட ஒன்றாக பாரம்பரிய அறிவுக் கோட்பாடு கருதி யாகும். இத்தகைய அறிவு தொடர்பான பாரம்பரிய பார்வையை உயிர்ப்பிப்பதே நவீனத்துவ அறிவின் எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்வதற்கான ஒரே வழி என பேராசிரியர் ஹுஸைன் நஸ்ர் வாதிக்கிறார் (மோடன், 2023). மேலும், அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் கருத் தாடல் மற்றும் அப்துஹு முன்னெடுத்த இஸ்லாமிய நவீனத்துவம் என்ற இரு சிந்தனை இயக்கங்களையும் பேராசிரியர் நஸ்ர் விமர்சனம் செய்கிறார். ஏனெனில், இரு சிந்தனை இயக்கங்களுமே நவீனத்துவ அறிவு மரபை நோக்கிய தத்துவ ரீதியான விமர்சனங்களை முன்வைக்கவில்லை. மாறாக, அதன் தத்துவ அடிப்படைகளை ஏற்றுக் கொள்கின்றன. மாறாக, அதனுடன் இஸ்லாமிய உலக நோக்கில் நின்று எவ் வாறு உறவாட முடியும் என்பதைப் பற்றி மட்டுமே அவை பேசுகின்றன என்கிறார். எனவேதான், இஸ்லாமியப் பாரம்பரியம் பிரசவித்த சில பகுப்பாய்வுச் சிந்தனையை நவீன விஞ்ஞானத்துடன் உடன்பட்டுச் செல்வதாக அவர்கள் கருதினார்கள். மாறாக, நவீனத்துவம் ஏற்படுத்திய எதிர் மறையான விளைவுகளை ஏன் பாரம்பரிய அறிதல் முறைகள் ஏற்படுத்தவில்லை என்ற கேள்விக்கு அவர்கள் விடையளிக்க வில்லை. காரணம், நவீனத்துவமும் இஸ் லாமியப் பாரம்பரியமும் உடன்படும் புள்ளிகள் இருந்த போதிலும்கூட, இரண் டும் இரு வித்தியாசமான தத்துவ அடிப் படைகளைக் கொண்டிருந்ததாகும். இதனை இஸ்லாமிய நவீனத்துவவாதி களும் அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் இயக்கமும் விமர்சனபூர்வமாக அணுக வில்லை என்கிறார் பேராசிரியர் நஸ்ர் (மோடன், 2023). மறுபுறம், நவீனத்துவ அறிதல் முறைகள் பற்றிய நஸ்ரின் மரபு வழிவாத விமர்சனங்களை வெறும் இறந்த காலம் பற்றிய ஏக்கம் (Nostalgia) என விமர்சனம் செய்கிறார் செய்னுதீன் சர்தார். அதனைத் தாண்டி, நவீனத்துவ அறிதல் முறைகளை சீர்திருத்தம் செய்தல் பற்றிய ஆழமான அவதானங்கள் எதுவும் அவரின் சிந்தனைச் சட்டகத்தில் இல்லை என்றும் சொல்கிறார் (மோடன், 2023).

## 06. முடிவுரை

நவீனத்துவ அறிவுக் கோட்பாடுகளை எதிர்கொள்வதற்காக இஸ்லாமிய சிந்த னையாளர்கள் முன்வைத்த கருத்துக்களை தொகுத்து நோக்கும்போது சமகால இஸ் லாமிய அறிவுக் கோட்பாட்டு முயற்சிகள் பற்றிய இரு முக்கியமான அவதானங் களை முன்வைக்க முடியும். முதலாவது, சமகால இஸ்லாமிய அறிவுக் கோட் பாட்டாக்க முயற்சிகள் பல்வேறுபட் டவை என்பதாகும். அதாவது, நவீனத்துவ அறிதல் முறைகளை இஸ்லாமிய நோக் கில் நின்று புரிந்து கொள்ள முடியும் என்பது முதல் அதனை முற்றாக மறுத்து புதிய இஸ்லாமிய அறிவுக் கோட்பா டொன்றை பிரசவிக்க வேண்டும் என்பது வரை வித்தியாசப்பட்ட நிலைப்பாடுகள் இஸ்லாமிய சிந்தனையாளர்களுக்கு மத்தி யில் காணப்படுகின்றன. இரண்டாவது, இஸ்லாமிய அறிவுக் கோட்பாட்டாக்க முயற்சிகளை சமூக அரசியல் கண்ணோட் டத்திலும் புரிந்து கொள்ள வேண்டும்

என்பதாகும். உதாரணமாக, இஸ்லாமிய நவீனத்துவ கருத்தாடல்கள் மீதான ஆர்வம் குறைந்து, இஸ்லாமிய புத்துயிர்ப்புவாத சிந்தனைகள் எழுச்சியடைந்ததன் பின் புலத்தில் முஸ்லிம் உலகின் அரசியல் மாற்றங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன. அதே போன்று, அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் சிந்தனைகள் தோற்றம் பெற்றதன் பின்புலத்திலும் அரசியல் இஸ் லாம் பற்றிய எதிர்மறையான சமூக நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. எனவே, இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு பற்றிய உரையாடலை அதனுள் காணப் படும் பல்வகைப்பட்ட போக்குகள் மற் றும் அதன் இயக்கத்தை திசைப்படுத்திய சமூக-அரசியல் காரணிகள் என இரண்டு அடிப்படைகளில் நின்று புரிந்து கொள்ள வேண்டும்.

### உசாத்துணை:


Abaza, M. (2002). Debates on Islam and Knowledge in Malaysia and Egypt. (New York: Routledge)

Abusulayman, A.H (1985). Islamaization of Knowledge with Special Reference to Political Science. American Journal of Islamic Social Sciences, 02, 263-32

Abusulayman, A.H (1997). Islamaization of Knowledge: General Principles and Work Plane. (Herndon: The International Institute of Islamic Thought).

Al-Alwani, T.J (1995). Islamaization of Knowledge: Yesterday and Today. American Journal of Islamic Social Sciences, 12, 81-101

Ali, M.H. (2021). Philosophical Sufism: An Introduction to the School of Ibn al-‘Arabi. (New York: Routledge)

Anjum, O (2012). Politics, Law and Community: The Taymiyyan Moment. (New York: Cambridge University Press).

Dzilo, H (2012). The Concept of Islamaization of Knowledge and Its Philosophical Implications. Journal of Muslim-Christian Relations, 23, 247-56

El-Tabugi, C. S (2019). Ibn Taymiyyah on Reason and Revelation: A Study of Dar taru al -aql wa-l-naql. (Leiden: Brill).

Furlow, C.A (1996). The Islamaization of Knowledge: Philosophy, Legitimization and Politics. Social Epistemology, 10, 259-71.

Hanafi, S (2021). From Streamlining to Mainstreaming of Islamaization of Knowledge: The Case of International Islamic University of Malaysia. American Journal of Islam and Society, 38, 101-35

Hashim, R & Rossidy, I (2000). Islamaization of Knowledge: A Comparative Analysis of the Conceptions of Al-Attas and Al-FÉrËqÊ. Intellectual Discourse, 08, 19-44.

Hourani, G (2007). Reason and Tradition in Islamic Ethics. (Cambridge: Cambridge University Press).

Iqbal M. (2016). Contemporary Issues in Islam and Science-Vol 02. (New York: Routledge)

Jasser, A (2021). Re-envisioning Islamic Scholarship: Maqasid Methodology as a New Approach. (Swansea: Claritas Books)

Johnston, D (2004). A Turn in the Epistemology and Hermeneutics of Twentieth Century UsËl al-Fiqh. Islamic Law and Society, 11, 233-82.

Keim, W (2017). Islamaization of Knowledge: Symptom of the Failed Internationalization of the Social Sciences. Method(e)s: African Review of Social Sciences Methodology, 2, 127-54.

March. A.F. (2011). Law as a Vanishing Mediator in the Theological Ethics of Tariq Ramadan, European Journal of Political Theory, 10, 177-201.

March. A.F (2007). Reading Tariq Ramadan: Political Liberalism, Islam and Overlapping Consensus, Ethics of International Affairs, 399-413.

Masud, M. K (2007). IqbÉl's Approach to Islamic Theology of Modernity. Al-Hikmat, 27, 1-36.

Moten, A.R (2004). Islamaization of Knowledge in Theory and Practice: The Contribution of Abul A'lÉ MowdËdÊ. Islamic Studies, 43, 247-72.

Rahman. F. (2011). Islamization of Knowledge: A Response, Islamic Studies, 50, 449-457.

Ramadan, T (2009). Radical Reform: Islamic Ethics and Liberation. (New York: Oxford University Press).

Siddiqui, S (2019). Law and Politics under Abbasids: Intellectual Portrait of al-Juwayni (Cambridge: Cambridge University Press)

Stenberg, L. (1996). Seyyed Hussain Nasr and Ziauddin Sardar on Islam and Science: Marginalization or Modernization of Religious Tradition, Social Epistemology, 10, 273-87.

Tabrizi, B.H (1996). Is Islamic Science Possible, Social Epistemology, 10, 317-30

Uyangoda, J (2018). Social Research: Philosophical and Methodological Foundations. (Colombo: Social Scientists Association).

Vali S. R. N (1991). Islamization of Knowledge: A Critical Overview, Islamic Studies, 30, 387-400.